UNIVERSITY OF JAFFNA SRI LANKA
RECEIVED 20-6-1986
PERIODICALS DIVISION
LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 5 ஷவ்வர 10 இதழ் 128
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19-6-1986

## வல்வையில் ராணுவம் - புலிகள் மோதலில் மூவர் பலி, பலர் காயம்!

[வல்வெட்டித்துறை]

வல்வை இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் வெளியே வர முயன்ற இராணுவத்தினர் மீது மூன்றுவது தடவையாக தமிழீழ விடுதலைப் புலிகள் சிலிண்டர் தாக்குதலை மேற்கொண்டபோது மூன்று இராணுவத்தினர் பலியாகினர். மற்றும் பல இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து சுமார் பத்துத்தடவைகள்முகாமிலிருந்து 'ஷெல்' தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் ஊரிக்காட்டுப்பகுதியில் சில வீடுகள் சேதமாயின போராளிகள் தரப்பில் எதுவித சேதமுமில்லை. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைதானவர்கள் 20 பேர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

இரணைதீவுக்கடலில் கடந்த ஏப்பிரல் மாதம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 34 இளைஞர்களில் 20 இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## மன்னார் சம்பவம் ஒருவர் பலி

(மன்னார்)

மன்னார் முள்ளிக்குளத்தில் ரோந்து சென்ற ஆயுதப்படையினரை நோக்கி போராளிகள் எதிர் தாக்குதல் நடாத்திய போது ஆயுதப்படையினர் தரப்பில் பலத்த சேத மேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து அரசு விடுத்துள்ள அறிக்கையில், ஆயுதப்படையினரில் மூவர் காயமடைந்ததாகவும் அவர்களில் ஒருவர் பின்னர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

எரிபொருள்மற்றும்பொருட்களை தட்டுப்பாடின்றி இங்கு பெறுவது தொடர்பான ஆய்வு நிறுவனத்தாரின் கருத்தரங்கு

[6ம் பக்கம் பார்க்க]

● முதலமைச்சர், அமைச்சரவை கொண்ட

# மாகாண சபைகளுக்கு மந்திரிசபை அங்கீகாரம்

(கொழும்பு)

**ஒவ்வொரு மாகாணத்திலும் மக்களால் தெரிவான மாகாண சபைகளை ஏற்படுத்தவும், பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக் கூடிய முதலமைச்சர், அமைச்சரவை உறுப்பினர்களை நியமிப்பதற்கும் இம் மாகாண சபைகளுக்கு வழங்கக் கூடிய அதிகாரப் பகிர்ந்தளிப்புக்கும் மந்திரிசபை அங்கீகாரம் அளித்துள்ளது.**

உத்தேச மாகாணசபை யோசனைகள் இம்மாதம் 25ம் திகதிகூட்டப்படவிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகளின் சர்வகட்சிமகாநாட்டில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்படும்.

உத்தேச மாகாணசபை யோசனைகளின் பிரகாரம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபைகள்; அத்தகைய மாகாண சபைகளின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக்கூடிய முதலமைச்சர்கள், அமைச்சரவை உறுப்பினர்கள் ஆகியோரை நியமிப்பது தொடர்பான யோசனைகள் இதில் அடங்கியுள்ளன.

இத்தகைய மாகாணசபைகளுக்கு வழங்கப்படக் கூடிய அதிகாரங்கள், மற்றும் அதிகாரப்பகிர்ந்தளிப்பு போன்ற யோசனைகளையும் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. [வா]

## களவில் ஈடுபட்ட நால்வர் கட்டிவைத்து தண்டிக்கப்பட்டனர் ராணுவம் விடுவித்தது

[வவனியா]

வவனியா பூந்தோட்டம் என்ற இடத்தில் 4 இளைஞர்கள் நேற்று உயிருடன் மரத்தில் கட்டப்பட்டிருந்தனர்.

களவு குற்றச் சாட்டுக்களின் பேரில் இந்த நான்கு பேரும் இயக்க இளைஞர்களால் கட்டி வைக்கப்பட்டதாகத் தெரிகின்றது

இதையறிந்த ராணுவத்தினர் ஜீப் வண்டியில் அவ்விடத்துக்குச்சென்று கட்டப்பட்டிருந்தவர்களை அவிழ்த்து விட்டனர்.

## கொழும்பில் கைதான இரு தமிழ் இளைஞர்கள் பிணையில் செல்ல அனுமதி

[கொழும்பு]

கொழும்பு இலங்கை வங்கிக்கு வெளிநாட்டுக் காசோலையை மாற்றச்சென்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் கோட்டை நீதிமன்றத்தால் தலா 2,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை வராத்துப்பளையைச் சேர்ந்த நவரத்தினவேல் உமாபதி என்ற இளைஞரும் கரவெட்டி நவிண்டியைச் சேர்ந்த செல்லத்துரை தர்மராஜா என்ற இளைஞருமே காசோலை மாற்றச்சென்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களாவர். [புலோலி நிரு]

## திருமலையில் 23 பேர் கைது

[திருமலை]

திருகோணமலை மாவட்டத்தில் விஷேட ஆயுதப்படைப் பிரிவினர் நடாத்திய தீவிர தேடுதல் வேட்டையின் போது 23 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். (மா)

## விஸ்வமடுவில் லொறி கடத்தல்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து சில பொருட்களுடன் யாழ்ப்பாணம் வந்த லொறி ஒன்று கடந்த சனிக்கிழமை விஸ்வமடுவில் இனந்தெரியாதவர்களினால் கடத்தி செல்லப்பட்டுள்ளது.

## 'இராணுவம் முகாம் திரும்பியது'

[யாழ்ப்பாணம்]

''கொக்காவில் இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை சுமார் 150 இராணுவத்தினர் கிளிநொச்சி நோக்கி நடைபவனியாக வந்து கொண்டிருக்கையில் முருகண்டியில் வைத்து எமது தரப்பில் எதிர் தாக்குதல் நடத்திய போது இராணுவம் கொக்காவில் முகாம் நோக்கித் திரும்பியது. இதன் போது எமது தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். நீதிமன்றங்கள் செல்ல புதிய பாதை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்குச் செல்ல முதலாம் குறுக்குத் தெருவிலிருந்து நேற்று முதல் புதிய பாதை திறந்துவிடப்பட்டுள்ளது.

கோட்டைப்பக்கமாகவுள்ள நீதிமன்ற வாசல்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. அப்பகுதியில் சனநடமாட்டம் காணப்படவில்லை.

யாழ். மேல் நீதிமன்றம், யாழ். மாவட்ட நீதிமன்றம், யாழ் நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றுக்கு புதிய பாதை மூலம்தான் சகலரும் சென்று வருகின்றார்கள் மாவட்ட நீதிமன்ற மதில் இடிக்கப்பட்டு முதலாம் குறுக்குத் தெருவரை சுமார் ஆறரைஅடி அகல பாதை போடப்பட்டுள்ளது. (க)

## யாழ். நகரில் 3 கடைகளும் திறக்கப்பட்டன

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருந்த மூன்று கடைகள் யாழ். வர்த்தகர்கள் சங்கத்தின் சமரச முயற்சியினால் நேற்று மாலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. [க]

## ஜூன் மாத ஓய்வூதிய கொடுப்பனவுகள்

[யாழ்ப்பாணம்]

1986 ஜூன் மாதத்திற்குரிய ஓய்வூதியப்பற்றுச் சீட்டுக்கள் மீண்டும் கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்டு கொழும்பிலிருந்து பெறப்பட்டுக் கொடுப்பனவு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.'' என்று யாழ் அரசாங்க அதிபர் திரு மு. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:. ''வங்கிக் கணக்கு மூலம் ஓய்வூதியம்

[6ம் பக்கம் பார்க்க]

## தொலைபேசி தொடர்ந்து பாதிப்பு; லக்கல நிலையத்தில் பழுதடைந்துள்ளது

[யாழ்ப்பாணம்]

மலையகத்திலுள்ள லக்கலமலை உச்சி கோபுரத்தில் ஏற்பட்டுள்ளபழுதினால் யாழ்ப்பாணம்-கொழும்பு தொலைபேசித் தொடர்பு பாதிப்படைந்துள்ளது.

கிளிநொச்சியில் உள்ள கோபுரத்தில் ஏற்பட்ட பழுது திருத்தப்பட்டு விட்டதாகவும் லக்கலவில் உள்ள பழுதினால் தான் யாழ்ப்பாணத்திற்கு வெளியில் உள்ள தொலைபேசி

[6-ம் பக்கம் பார்க்க]

30 குருநகர் கடற்றொழிலாளர் மரணவிசாரணை:

## கை கூப்பி கும்பிட்ட நிலையில் ஒருவர் சுடப்பட்டிருக்கலாம்

### சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்

[நீதிமன்ற நிருபர்]

''பலியான குருநகர் கடற்றொழிலாளர்கள் 3 அடிக்கு மேற்பட்ட தூரத்தில் நின்று சுடப்பட்டுள்ளனர். ஒருவர் கைகூப்பிக் கும்பிட்ட நிலையில் அல்லது பாதுகாப்பிற்குக் கையை உயர்த்திய நிலையில் சுடப்பட்டுள்ளார். ஒருவர் சுடப்பட்டு மரணமான பின் கரடுமுரடான பகுதியில் இழுத்ததனால் காயம் ஏற்பட்டுள்ளது. ஒருவரின் உடலில் சன்னங்கள் இருந்தன.''

கரைவலை போடத் தீவுப் பகுதிக்கு இம்மாதம் 10ந் தேதி படகில் சென்றபோது பலியான 30 குருநகர் கடற்றொழிலாளரின் மரண விசாரணையில் சட்டவைத்திய அதிகாரி பேராசிரியர் என் சரவணபவானந்தனின் சாட்சியத்தின் போது இத்தகவல்கள் தெரியவந்தன.

யாழ் மேல் நீதிமன்றக் கட்டடத்தில் யாழ் பதில் நீதவான் கே பி எஸ் வரதராசா முன்னிலையில் நேற்றுக் காலை இவ்விசாரணை நடைபெற்றது.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் சட்டத்தரணி எஸ். தவபாலன் ஆகியோர் ஆஜரானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோழிஎரு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அண்ணுபாம், இணுவில். (A 845)

கோழிஎரு விற்பனைக்குண்டு. தொடர்பு: சீமாட்டி. No 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C 2914)

அராலி தெற்கு அம்மன் கோவிலடியில் அமைந்துள்ள ''கிலுவானை'' என்னும் 17½ பரப்புக்காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு. நா. தனபாலசிங்கம், 123/1 கோயில் வீதி, யாழ்ப்பாணம். [C 2923]

Honda C 90 Reconditioned ரூ 7, 500/-, தட்டச்சு இயந்திரம் புதியது portable ஆங்கிலம் ரூ 2,500/-, தட்டச்சு இயந்திரம் ஆங்கிலம் ரூ 1000/- 3—6 மணிவரை ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [C 2925]

3 படுக்கை அறைகள் மின்சார பைப் வசதியுடன் 1½ பரப்பில் வசதியான புதுவீடு பெரியகடைக்கு அண்மையில் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு. 435, கஸ்தூரியார் வீதி, கில்னர் ஒழுங்கை, யாழப்பாணம். (C 2955)

Bairaha Farms புரொயிலர் குஞ்சு விநியோக திகதி யூன் 27க்கும் Shetna Farm பிறவுண் பேட்டுக்குஞ்சு விநியோக திகதி யூலை முதல் வாரத்திற்கும் பின்போடப்பட்டுள்ளதை முற்பணம் செலுத்தியவர்களுக்கு அறியத்தருகிறோம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 2896]

## தேவை

சகலவிதமான கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள் திருத்துபவர்கள் உடன் தேவை. வயது 35 - 40 உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். உதயா வாச்வேக்ஸ், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. (C 2929]

அனுபவம் மிக்க அச்சுக் கோப்பாளர்கள் தேவை, நேரில் வரவும். பகுதி நேரமாகப் பணிபுரிய விரும்புபவர்களும் நேரில்வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [A 848)

மொத்தமாகவும், சில்லறையாகவும், பல சரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ள, நிர்வாகத் திறமை உள்ளவர் தேவை. உடன் நேரில் வரவும். லக்கி கவுஸ், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. (C2946)

எமது உற்பத்திப் பொருட்களை யாழ் குடாநாடெங்கும் வானில் சென்று விற்பனை செய்வதற்கும் ஓடர் சேகரிப்பதற்கும் முன் அனுபவம் உடைய விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. நற்சான்றிதழ்களுடன் காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 2-00மணிக்கும் இடை நேரில் வரவும். கொமிஷனுடன் அடிப்படைச் சம்பளமும் வழங்கப்படும். ரெலக்ஸ் இன்டஸ்றீஸ், 222 A, கஸ்தூரியார் வீதி, (ராதிகா ஜுவல்லர் மேல்மாடி) யாழப்பாணம். (C 2944 )

## தேவை

பாபுதேவி வீடியோ சென்ரரில் காசாளர் பதவிக்கு வெற்றிடம் உண்டு. 3 மைல் சுற்றுடலுக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விரும்புவோர் உடன்தொடர்பு கொள்ளவும். 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (C 2952)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு மிகவும் அருகாமையில் மாணவிகளுக்குச் சாப்பாடு/சாப்பாடில்லாமல் தங்குமிடவசதி உண்டு. விரும்பினால் சமைக்கலாம். 148, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (C 2957)

## வகுப்புகள்

புதிய இருமணித்தியால வார இறுதி SPoken English வகுப்புக்கள் வருகிற 21ம் திகதி காலை 11-30 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஆசிரியர் S B. Iyar 12 வைமன் வீதி, நல்லூர். [C 2910]

## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வு, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகால நரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய்கால வேதனைகள், மகப்பேறின்மை, குழந்தைகட்குசித்தஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R. மங்களாம்பிகை D, A. M. Dr. R. இலக்ஷ்மண ஐயர் D.A.M., மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரகுளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, சங்கிலியன்வீதி, நல்லூர். (C2570)

## தவறிவிட்டது

11-06-86 தட்டா தெருச் சந்திக்கும் கந்தரோடைச் சந்திக்கும் இடையில் பிறந்த தின படங்கள் முப்பதுடன், நெகடிவும், அல்பத்துடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். கணேசன் ஆர்ட் ஸ்ரூடியோ, K. K. S. ரோட், கொக்குவில் அல்லது முருகன் ஆபரண மகால், சுன்னுகம். [C-2947)

பா. சுரேந்திரன் இல. 690670950 V இலக்கமுடைய அடையாள அட்டை 4-6-86 அன்று நாவாந்துறை சந்தை ரோட்டில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் T. R. P. ஏஜன்சி, 65, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 2950)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

இனந்தெரியாத HERO சைக்கிள் ஒன்று கடந்த 16-06-1986 அன்று எம்மால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர் தகுந்த ஆதாரத்துடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். T. திருக்குமாரன், 880, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். [C 2951]

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அருளப்பு அல்வி ஜெற்றம்மா

துன்பங்கள் பல சுமந்து கடமையே வெற்றிக்கு வழி என்று உறுதிகூறி எம்மையெல்லாம் நல்வழி சமைத்து வாழ வைத்த எம் தெய்வமே. தாங்கள் மறைந்து இன்றோடு நான்கு ஆண்டுகள் சென்றுலும் நீங்கிவிட்ட உம் விம்பம், நீச்சலடிக்கும் எம் இதயங்களிலிருந்து என்றுமே நீங்காது, நீங்காது உம்நினைவுகள்.

உம்பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

4-ம் வட்டாரம், மண்டைதீவு. C 2953

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லப்பா இராசா

தோற்றம்: 1911

மறைவு: 29-06-1985

திதி: 19-06-1986

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்து அன்புடனும் பாசமுடனும் வாழ்ந்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த அன்பின் தெய்வமே வெள்ளி மறைந்தது போல் மறைந்து எங்களை ஆருத்துயரில் விட்ட அன்பு தெய்வமே ஐயா நீங்கள் இறைவனடியில் மறைந்திருந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பீர்கள். ஐயா உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

இ. இலங்கநாதன்.

சுன்னுகம்.

C 2902

### யாழ். ஐக்கிய லாபநிதி பற்றுவரவுடையோர் சங்கம்

ஷெ சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 22-6-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்த ஆதீன மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர் யாவரும் சமுகம்தரவும்.

சி. விஸ்வலிங்கம்,
செயலாளர்

[C 2928]

## நற்செய்தி

றிக்கோ சுவைப்பிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் பிரயாணிகளின் வசதி கருதியும் காலை உணவாகப் பாண், பட்டர் பாண், ஜாம்பாண் மற்றும் சீனிச் சம்பல், மாசிச்சம்பல், பருப்புக்கறி ஆகியன பரிமாறப்படுகின்றன. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**றிக்கோ சுவீட்ஸ் அன் கிறீம் ஹவுஸ்**
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22464
23889

C 2962

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க் ★ சவூதி அரேபியா

1. கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.
2. சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர்களுக்கான பிரயாண ஒழுங்கு உடன் செய்து கொடுக்கப்படும்.
3. செல்ல விரும்புவோர் யூன் 25-ந் திகதிக்கு முன்பாக கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
4. எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்.

தொடர்பு:

**N.BALA,** திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

பிற் குறிப்பு:- (764 பஸ்-பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை) (C2920)

திரண்டு வருக!!!

### யாழ். செவிப்புலனற்றோரால் நடாத்தப்படும்

## கைப்பணி பொருட்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம்:- கில்னர் மண்டபம்
426, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- 20-06-86 தொடக்கம் 22-06-86வரை

நேரம்: காலை 10-00மணி தொடங்கி
மாலை 6-00 மணிவரை நடைபெறும்.

வரவேற்பாளர்:

க. சண்முகநாதன் (தலைவர் செ. ந. நிலையம்)

**20-06-1986 திறந்து வைப்பவர்கள்:**

(1) திருமதி சிவசிதம்பரம்
(உதவி அத்தியட்சகர் சமூக சேவைப்பகுதி யாழ்ப்பாணம்)

(2) திரு. சீ. வி. கே.சிவஞானம்
(மாநகரசபை ஆணையாளர் யாழ்ப்பாணம்)

(3) திரு. S. யுவேந்திரன்
(தலைவர் லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணம்)

(4) திரு. S. சிவஞானம்
(தலைவர், செயலாயர் இல்ல முகாமைத்துவக்குழு)

**21-06-1986 திறந்து வைப்பவர்கள்:**

(1) திரு. க. சோமசுந்தரம்
(பிரதம கல்வியதிகாரி, யாழ்ப்பாணம்)

(2) திரு. அன்ரன் அல்பிரட்
(பிராந்திய உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்றமும் வீடமைப்பும்)

தயவுசெய்து உறவினர், நண்பர்கள் அயலவர்கள் யாவரையும் அழைத்து வருக.

நன்றி.

[A-850]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மாசற்ற அன்பர் நெஞ்சே மாருத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் தேசினையுங் காண்பேஞே
—தாயுமானவர்.

## நமது நோக்கு

# 'நிற்பார் நிற்க நில்லாவுலகில் நில்லோம்'

“வான் கலந்த மாணிக்கவாசகரின்” திருவாசகத்தில் யாத்திரைப் பத்தில் வரும் ஏழாவது பாட்டின் முதலடியே இன்றைய தலையங்கமாவதை வாசகர்கள் மன்னிக்கவேண்டும்.

இக்காலத்தில் இந்த நாட்டில் தமிழ் மக்கள் திருவாசகத்தையே தெருவாசகமாக்க நேரிட்டால் அதற்குப்போதிய காரணம் உண்டென்பது நிச்சயம். நாம் குறிப்பிடும் ''யாத்திரைப் பத்து'' பொதுவாக மக்களால் பாடப்படுவதல்ல. சிவாலயங்களில் குறிப்பாக சிதம்பரநடராஜர் தேரேறும் தினத்தில் தேர்புறப்படுமுன் இது பாடப்படுவது ஒரு மரபு.

சுவாமி தேரேறியதும் விரதகாரர் வீட்டுக்குச் செல்லும் அமளியுடன் சேர்ந்த பலவிதசத்தமும் சாவடியும்நிறைந்தநேரத்தில்பாடுபவரும் ஸ்ரீ நடராஜருமே இதனை ரசிக்கவாய்ப்புண்டு. குருக்களும் இதனை இடைவேளையாகக் கருதி தமக்குரிய கிரியை முறைகளில் கவனஞ் செலுத்துவது இயற்கை. எனவே பொது மக்களுக்குப் பழக்கமற்ற பத்து இது.

இப்பாட்டை, இப்பாட்டின் அடியை தெருவுக்குக் கொண்டு வர ஏன் துணிந்தோம்?

எங்கள் நேற்றைய பிரசுரத்தில் திரு. மாணிக்க இடைக்காடர் எழுதிய கட்டுரையில் வரும் ஒருபகுதி இன்று இந்த நாட்டை விட்டு எந்த நாட்டுக்காவது ஓடித்தப்பவேண்டு மென்ற பித்து இங்கு வாழ்ந்துவரும் தமிழ்மக்கள் மத்தியில் தொற்று நோய் போல் பீடித்திருப்பதை குறிக்கிறது

லண்டனில் வாழும் தமிழ்ச்சமூகம் ஏனைய நாடுகளில் வாழ்பவர் போல தன்னுலியன்ற உதவியை தாம் பிறந்த பொன்னுட்டிற்குதவி வருவது எல்லோரும் நன்கறிந்தவிடயம். குறிப்பாக 'ஸ்கொட்' தாபனத்தார் எடுத்த, எடுக்கும் பெருமுயற்சி, இன்று தினந்தோறும் அகதிகளாக மாறிவரும் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத போதும், அவர்களின் நிவாரணத்துக்கும், • அதற்கு மேலான அவர்களின் மறுவாழ்வுக்குரிய பாரிய திட்டங்களுக்கும் பெரும் பங்களிக்கின்றது.

1983ம் ஆண்டு யூலைக் கலவரத்தை தொடர்ந்து தமிழர்நிலை இன்று மிக மோசமடைந்திருப்பதும், அதேசமயம், தமிழ்ப் போராளிகளின்வீரச்செயல்களைக் கண்டு தத்தளிக்கும் அரசு எவ்வாற்ருலும் இதனை ஒடுக்கும் எத்தனத்தில் எந்தப் பிசாசுடனும் சிநேகம் பூணுவதில் நம்பிக்கைகொண்டிருப்பதும் நாட்டைவிட்டு வெளியேறிய இலங்கைத் தமிழர்கள் நன்குணரவேண்டிய விடயம். இனியும் வருங்காலத் தமிழ யூதர்கள் போல் தெறிகெட்டோடுவதா?

இப்பெரும் புண்பட்ட நிலையை நோக்கும்போது 'நாம் பெரும் புத்திசாலிகள், நேரகாலத்துக்கு தப்பி வந்துவிட்டோமென்று பெருமிதம்பேசும் கூட்டத்தினரை லண்டனில் மட்டுமல்ல வேறு பல நாடுகளிலும் இருப்பதை விளக்கவே மாணிக்கவாசக சுவாமிகளிடம் தஞ்சம் புகுந்தோம். இது ஒரு தற்காலிகமான நோயென்றுணர்க.

அடிகளார் குறிப்பிட்ட 'நில்லா உலகை' புரிந்து கொள்ள முடியாத அறிவிலிகளே தம்மைப் பெற்றெடுத்த பொன்னுட்டை மறப்பதில் இன்பங்காண்பர்.

'மூளைவிரயம்' என ஒரு காலத்தில் ஆராயப்பட்ட பெருவிடயம் நாம் கண்டிக்கும் கூட்டத்தினருக்குப் பொருத்தமாகிறது.

பல நாடுகளிலுமிருந்து படித்தவர்கள் நிபுணர்கள் வெளிநாடுகள் தேடிக் குடியேறுகின்றனர். அவர்களின் குறைநிறையை ஆராயும் அவசியம் இன்று குண்டுகளுக்கும், ஆகாய விமானத் தாக்குதலுக்கும் பலியாவதுடன் நவரக ஆயுதங்களை எதிர்நோக்கும் அபாயத்துக்குள்ளாகும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு ஏது?

இங்கு பரம்பரையாய் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் மீண்டும் அடிமைகளாவார்களென்ற அச்சம் உண்டா? அது உண்மையானல் செத்தவன் வாயில் மண் என்பது போல தப்பியோடியது, தப்பியோட முயல்வது உசிதமல்லவா? இந்த சிந்தனையையே நாம் வலுவாகக் கண்டிக்கிறோம். தூரநோக்கற்ற தேசப்பற்றற்ற சமூக விரோத சிந்தனை இது.

இலங்கையிலும் பல மடங்கு பெருத்த தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஒருதீவுக்கண்டம் எனப்படும் அவுஸ்திரேலியாவின் தொகை என்ன? இலங்கையிலும் சற்றே கூடிய நூற்றறுபது (160) லட்சம் மக்கள் சுமார் 95 சதம் ஆங்கிலேயர், கிறீஸ்தவர், ஏனையோர் பெரும்பாலும் ஐரோப்பியர் வெள்ளையருக்கென்று உலகின் இந்தப் பகுதியில் பிரத்தியேகமாக பாதுகாத்து வைக்கப்பட்ட வளம் நிறைந்த அவுஸ்திரேலியாவுக்கு இன்று ஆட் சேர்க்கிருர்கள். எல்லோரும் அங்கு செல்ல முடியாது. சுண்டி எடுக்கப்படுவார்கள். வடித்தேற்றும் போதும் தெரிந்து ஏற்றுகிருர்கள், தெரிந்து ஏற்றும் போதும், வடித்தேற்றுகிருர்கள்.

காலமாற்றத்தால் ஏற்பட்ட கொள்கைமாற்றம் இலங்கைத்தமிழரின் முதல் வடியைக் கவர்ந்திழுக்கிறது. அதில் என்னவியப்பு? எந்த நாட்டுக்கும் பீடும் பெருமையும் அளிக்க வல்ல தமிழர் பலர் அங்கு வதிகின்றனர். இவர்களின் பெருமை ஏனையோருக்கு ஆற்றுப் படையாகின்றது.

நிற்பார் நிற்கட்டும் நில்லா உலகில் நில்லோமென்ற பாணியில் இப்படைபெருகினல், இன்று நம் ஆவி, உயிர், உடைமை, நிபுணத்துவம் அனைத்தையும் தாம் பிறந்த நாட்டுக்கு தியாகம் செய்ய உறுதி கொண்டோர் [illegible] என்னுகும்?

# மலைபோல் கடலை நம்பிய மக்கள் இன்று துயரக்கடலில்!

“தரை மேல் பிறக்க வைத்தான்! — எங்களை

தண்ணீரில் பிழைக்க வைத்தான்!

தரை மேல் இருக்க வைத்தான்! — பெண்களைக்

கண்ணீரில் குளிக்க வைத்தான்!”

கடலையே மலைபோலத் தமது ஜீவனேபாயத்துக்காக நம்பியிருந்த யாழ்ப்பாண மீனவ சமுதாயம் இன்று துயரக் கடலில் தத்தளிக்கிறது!

தரைமேல் பிறந்தாலும் தமது பெரும் பொழுதை தண்ணீரில் கழித்துவந்த இந்த மீனவர்கள் இன்று கண்ணீரில் மிதக்கின்றனர்!

கடல்வலயச் சட்டம் என்ற பேரில் இவர்களினது அன்ருடத் தொழில் மீது விழுந்த முதல் அடியினலேற்பட்ட காயங்கள் ஆருமலிருக்கின்ற தறுவாயில் கடலேரிகளில் மீன்பிடியைத் தடுக்க அரசு கொண்டுவந்துள்ள புதியசட்டம் இந்த அப்பாவித் தொழிலாளர் மீது ஒரு 'மரண அடி' யாக விழுந்துள்ளது.

### கேள்விக்குறியி ப

### எதிர்காலம்

மண்டைதீவுக் கோரக் கொலைகளால் ஏற்பட்டசோகங்களை இன்றுமே அகலாத சூழலில் புதிய தடைச்சட்டத்தால் மீனவர்களின் அன்ருடத் தொழிலுக்கேற்பட்ட பாதிப்புக்கள் பற்றி அறியவென குருநகர் பகுதிக்குச் சென்றபோது எதிர்ப்பட்ட முதல் மீனவரிடம் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிவினவிய சமயம் 'எதைச் செல்லுவது எதைச் சொல்லாமால்விடுவது? நாளைக்கு நாம் என்ன செய்யப் போகிறேம் என்பதை நினைத்துப் பார்க்கக்கூட எம்மிடம் திராணியில்லை...'' எனஉற்சாகமிழந்த குரலில் கூறினர்.

இந்த ஒருபதிலிலேயே அந்த ஏழை மீனவர்களின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்ற படுபயங்கரததை உணரமுடிந்தது.

கடலேரிகளில் மீன்பிடிக்கத் தடைவிதிக்கும் சட்டத்தால் குருநகரையும் அதையொட்டிய பகுதிகளையும் சார்ந்த 3,500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தொழில் வாய்ப்பு முற்ருக இழந்தநிலையில் அன்ருட ஜீவனேபாய ஊற்றுக்கள் அடைக்கபபட்ட நிலையில் இக் குடும்பங்களின் வழமையான வாழ்க்கையோட்டம் ஏறத்தாழ ஸ்தம்பித்த நிலையிலேயே இன்றுள்ளது. பாதிக்கப்பட்டமேற்படி 3,500 குடும்பங்களின் 1,000 குடும்பங்களின் நிலவரம் படு பரிதாபகரமானதாக உள்ளது.

### நின்றுபோன நிவாரணங்கள்

கடல் வலயச் சட்டம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்களின் தொழிலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஓரளவேனும் ஈடுகட்டும் முயற்சியாக அவர்களுக்கு உணவு முத்திரைகளும், உணவு அட்டைகளும்வழங்கப்படடுவந்தன. இவையாலும் அன்ருடத் தேவைகளை முற்றுமுழுதாக பூர்த்திசெய்ய முடியாத பொழுதிலும் இவைபாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சற்று ஆறுதல் அளிப்பனவாக அமைந்தன. ஆனல்உணவுஅட்டைகளவழங்கப்படுவதுதற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அல்லது தாமதப்படுத்தப் பட்டுள்ளது கடந்த 3 மாதகாலமாக வழங்கப்பட்ட உணவு முத்திரைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைக் கடற்ருெழில் கூட்டுத்தாபனம் பொது அரச நிறுவனங்கள் அடிக்கடி திரட்டியபோத பொழுதிலும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

கடல் வலயச் சட்டம் கடலேரிமீன்பிடித் தடைஉத்தரவு ஆகியவற்றினல் மீனவர் குடும்பங்கள் மட்டுமன்றி கடற்ருெழில் சார்ந்தஏனையதொழிற்துறைகளும் ஸ்தம்பித்துப் போயுள்ளன.

### பாதிப்பின் வியாபிப்பு

சில்லறை மீன் விற்பனையாளர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளையில் மீன், இருல், கணவாய் முதலானவற்றை பதனிட்டு ஏற்றுமதி செய்யும் தொழிலகங்கள் மூடப்பட்டுள்ளன. இருல்பதனிடல் ஏற்றுமதி நிலையங்கள் ஒவ்வொன்றிலும்400,500 பேர் வேலை செய்து வந்தார்கள். இவர்களில் பெருபாலானேர் ஏழைப் பெண்கள். இவர்கள் எல்லோரும் இன்று வேலையிழந்து அவஸ்தைப் படுகின்றனர்.

வங்கிகளிடமிருந்து படகுகள் மற்றும் கடற்ருெழில் சாதனங்களை வாங்கவெனப் பெற்ற கடனுக்கான வட்டியைக்கூட இறுக்க வழியில்லாத வக்கில்லாத பரிதாப நிலைக்கு மீனவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பெரு முதலீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட எந்திரப் படகுகள்மற்றும் கடற்ருெழிற் கருவிகள் பயன்படுத்தப்படாது விடப்பட்டுள்ள நிலையிலிருப்பதால் அவைதுருப்பிடித்து செயலிழந்து போய்விடும் அபாயம் உருவாகியுள்ளது.

யாழ். குடாநாடு முழுவதிலும் ஏறத்தாழ முப்பத்தையாயிரம் மீனவர்களின் குடும்பங்கள் பசி, பட்டினியில் உழலும் பேரபாயத்துக்கு முகம் கொடுத்த நிலையிலுள்ளன.

உதாரணமாக, ஊர்காவற்துறைத் தொகுதியில் மட்டும். அனலைதீவு, எழுவைதீவு, பருத்தியடைப்பு, மெலிஞ்சிமுனை, கொட்டில்துறை, வெள்ளக் கடற்கடரை, அராலித்துறை, வேலணைத்துறை, நயினதீவு, நெடுந்தீவு. புங்குடுதீவு, இறுப்பிட்டி, புளியந்தீவு, பருத்தித்தீவு. ஆகியவற்றிலுள்ள 1000க்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் இன்று ஜீவனேபாயமற்ற நிர்க்கதிக்குளாகியுள்ளன. வளிச்சல் முறையில் மீன்பிடிக்கும் மீனவர்களே கடல் வலயச் சட்டத்தினல் பெரிதும் பாதிக்கப்பட்டவர்.

### “கடல் கருணை மிக்கது'

மண்டைதீவில் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி மாண்ட குருநகர் மீனவக்குடும்பங்கள் சிலவற்றின் உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடியபோது அவர்கள் கூறிய கண்ணீர்க் கதைகள் கல்லை உருக்குவனவாக இருந்தன. அருளானந்தம் பெனடிக்ற் என்பவரது குடும்பத்தில் அவரும், அவரது மூன்று புதல்வர்களும் கொலையுண்டுள்ளனர். குருநகரில் எங்கு திரும்பினுலும் யாராவதொருவர் சோகக்கதையொன்றினைச் சொல்லக்காத்திருப்பதைக் காணலாம்.

கள ஆய்வாளர் 'பெரி'

''இத்துணை கொடுமைகள் நடைபெற்று இன்று இப்படித் துயரம் அனுபவிப்பதால் இந்தச் கடற்ருெழில்மீது விரக்தியோ அல்லது வெறுப்போ உங்களுக்கு ஏற்படவில்லையா?' எனநான் ஒருவரை வினவியபோது ''இது எங்கள் ரத்தத்துடன் ஊறிய பரம்பரைத் தொழில். 'கருணைமிக்க கடல் எங்களை கைவிடாது, அதை நாங்களும் விடப்போவதில்லை' என அவர் கண்ணீருக்கு மத்தியிலும் கம்பீரமாகக் கூறியதைக் கேட்டபோது எமக்கு மெய்சிலிர்த்தது.

நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இந்த ஏழை மீனவர்களின் துயர்துடைக்க இரக்க உள்ளம் படைத்த எல்லோருமே முன்வரவேண்டும்!

## ஆலய உற்சவம்

(புலோலி)

பொலிகண்டி கந்தவனம் ஆலய தேர் உற்சவம் இம்மாதம் 20-ம் திகதி நடைபெறுகின்றது. மறுநாள் 21-ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை புளியங்கூடல் செருத்தனைப் பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேறற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் உற்சவம் நடைபெற்று இம்மாதம் 28ம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 29ம் திகதி தீர்த்தோற்சவத்துடனும் முடிவுறும்.

[சிவ]

## யாருடையது?

யாழ். சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த திரு. வி. வாசுதேவன் என்பவர் வைத்தீஸ்வராக் கல்லூரி முன்பாக ஒரு பித்தளைத் திறப்பினையும், பிறவுண் வீதி கலட்டிச் சந்தியைச் சேர்ந்த திரு. மி. கந்தையா என்பவர் கே. கே. எஸ். ரேட் பிள்ளையார் கோயிலடியில் ஆறு திறப்புக்கள் கொண்ட திறப்புக் கோர்வையையும் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா கோரியும் அவசரகாலத்தை முடிவுக்குக் கொண்டுவர மறுப்பு

உலகச் செய்திகள்

## நிறவெறி அரசுக்கெதிரான யு.எஸ். கொள்கை மாறுமா?

பிரிட்டோறியா, ஜூன் 18

தென்னாபிரிக்காவில் கடந்த 13ம்திகதி தொடக்கம் ஜனாதிபதி திரு. போத்தாவினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர காலநிலைச் சட்டத்தை முடிவுக்கு கொண்டுவருமாறு அமெரிக்கா தென்னாபிரிக்காவைக் கேட்டுள்ளது. அமெரிக்க அரசின் இவ்வேண்டுகோளை தென்னாபிரிக்கா நிராகரித்துவிட்டதாகதிரு போத்தா நேற்று தெரிவித்தார்

இதேவேளை கடந்தவாரம் கேப்டவுனில்தேவாலயப் பிரார்த்தனைகளிலும்'சுவெட்டோ' கிளர்ச்சியின் 10வது ஆண்டு நினைவு தின நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டிருக்கும் போது சுமார் இருநூறுபேருக்கு அதிகமானோர் கைதுசெய்யப்பட்டதாக சர்வதேச பொதுமன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க நிறவாத எதிர்ப்பாளர்களுக்கெதிராக கடந்த வாரம் தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது 4 அமெரிக்கர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர்களில் இருவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும் அமெரிக்க ராஜாங்க அமைச்சு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடையைவிதிக்குமாறு பலநாடுகள்விடுத்துள்ள வேண்டுகோளை அமெரிக்காவும், பிரிட்டனும் நிராகரித்துவிட்டன

தென்னாபிரிக்காவிற்கு எதிரான பொருளாதாரத் தடையை நிராகரிப்பதில் 'தன்னுடைய நிலையில் மீண்டும் உறுதியுடன் இருப்பதாக' பிரிட்டன் தெரிவிததுள்ளது. [து]

பாதுகாப்பு நடவடிக்கை:

## கொபர்சேவின் யோசனையை அமெரிக்கா நிராகரித்தது

வாஷிங்டன் ஜூன், 18

எஸ்.டி.ஐ.திட்டம் எனப்படும் போர் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை சோதனைக்கட்ட அளவில் நிறுத்திக்கொள்ளவேண்டுமென்று சோவியத் தலைவர் திரு.கொபர்சேவ் அண்மையில் தெரிவித்தயோசனையை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

திரு.கொபர்சேவ்வின் இந்த யோசனை பயனளிப்பதுபோல் தோன்றினாலும் எஸ் டி ஐ நடவடிக்கைகளை சோதனைக்கட்ட அளவில் நிறுத்திக்கொள்வது அமெரிக்காவின் நலன்களுக்கு உகந்ததல்லவென்று அமெரிக்க பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1972ம்ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உந்து விசை ஏவுகணை எதிர்ப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா மேலும் பதினைந்து ஆண்டுகளுக்கு பின்பற்றுவதாக உறுதிகூறவேண்டுமென்று திரு. கொபர்சேவ் விரும்பியதாகவும் அவர் தெரிவித்தார்,

சோவித் தலைவ திரு கொபர்சேவ்வின் இந்த யோசனை அமெரிக்க ஆய்வுத் திட்டங்களின் மேம்பாட்டைத் தாமதப்படுத்திவிடும் என்றும் அவர் தெரிவித்தார். (து)

## பஞ்சாப் ஹரியானா பிரச்னை:

## இந்திய உள்துறைச் செயலர் அதிகாரிகள் சந்திப்பு

சண்டிகார், ஜூன் 18

பஞ்சாப் மாநிலத்திற்கு பிரத்தியேக தலைநகர் ஒன்றை உருவாககும் சர்ச்சைக்குரிய திட்டமொன்றின் அடிப்படையில் ஆட்சிபுரியும் அகாலிதள் சீக்கிய அரசியற் கட்சியில் மேலும் பிளவுகள் தோன்றிக்கொண்டிருக்கும் சமயத்தில் நேற்றுநான்குபேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

சண்டிகார் நகரை ஹரியானா மாநிலத்திலிருந்து பெற்றுக்கொண்டு அதற்குப்பதிலாக 70 அயிரம் ஏக்கர் நிலப்பரப்பை பஞ்சாபிற்கு வழங்கும் திட்டமொன்றை எதிர்த்து நேற்று பாராளுமன்ற விவாதமொன்றின்போது இரண்டுஅமைச்சர்கள் தாம் இராஜினாமாச் செய்யப்போவதாக அச்சுறுத்தல் விடுத்தனர்.

இதேவேளை நேற்றுப் புதுடில்லியில் இந்திய உள்துறைச் செயலர் திரு. ராம் பிரதாம் பஞ்சாப் மற்றும் ஹரியானாவின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்

பஞ்சாப்பிற்கு சண்டிகாரையும் பஞ்சாப்பின் சிலபகுதிகளை ஹரியானாவிற்கும் ஒரேசமயத்தில் மாற்றுவது குறித்த இறுதியான கட்டவ சகத்தின் முடிவுகளை உள்துறைச் செயலர் இந்த அதிகாரிகளுடன் விவாதித்ததாகத் தெரியவருகிறது.

இதுஇவ்வாறிருக்க பஞ்சாப்பில் கபுர்தலாவில் நேற்று நான்கு பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. [து]

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோயில் மகோற்சவ விழா கடந்த 11ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

20ம் திகதி தேர்த்திருவிழாவும் 21ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

## பொது மக்கள் சமாதான சபை

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை மக்கள் தமக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்கப் பொது மக்கள் சாமாதான சபை ஒன்றை அங்கு ஸ்தாபனம் செய்துள்ளார்கள்.

இதன் தலைவராக கு. அருளம்பலமும் செயலாளராக மா. அமிர்தலிங்கமும், பொருளாளராகப் பொ, கார்த்திகேசுவும் தெரிவு செய்யப்பட்டனர். பத்துப் பேரைக் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

"உலகக்கிண்ண" உதைபந்தாட்டம்:

## உலகச் சாம்பியனான இத்தாலியும் தோல்வி!

[மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோவில் நடைபெறும் 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில், தற்போதைய உலகச் சாம்பியனான இத்தாலி தோல்வியடைந்து விட்டது.

இவ்வருட ஐரோப்பியச் சாம்பியனான பிரான்ஸுக்கும்-இத்தாலிக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2-வது சுற்றுப் போட்டியில் பிரான்ஸ் 2—0 கோல்களால் வெற்றி பெற்று கால்இறுதிப் போட்டிக்கு விளையாடத் தெரிவாகியுள்ளது.

இப்போட்டியில், பிரான்ஸ் கோஷ்டியின் காப்டனே இவ்விரு கோல்களையும் போட்டார்.

இத்தாலியின் இத்தோல்வி உலக உதைபந்தாட்ட அவதானிகளுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை, பிரான்ஸ் கோஷ்டி பிரேஸில் கோஷ்டியை கால் இறுதிப் போட்டியில் சந்திக்கவிருக்கிறது.

**மே. ஜெர்மனி வெற்றி**

மே. ஜெர்மனிக்கும், மொறக்கோவுக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு ரசிப்பான போட்டியில், இதுவரை தோல்வியடையாத மொறக்கோ 1—0 கோலால் தோல்வியடைந்துள்ளது.

மேற்படி இரு கோஷ்டிகளும் இடைவேளைவரை கோல்கள் ஏதும் போடாத நிலையில் இருந்தன. [வி]


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## நிலஅளவை வேலைக்கான கேள்வி மீள அழைத்தல்

பின்வரும் நில அளவை வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01-ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அட்டவணை

| வேலை விபரம் | கேள்விப்பிணைப்பணம் மீளளிக்கப்படக்கூடியது. ரூபா. | கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்கப்படத்தகாதது. ரூபா |
|---|---|---|
| நிலாவரை "இடி" இணற்றிலிருந்து கோண்டாவில், மாநகரசபை நீர் விநியோக ஸ்தானம் வரை குழாய் நீர் விநியோகம் செய்வதற்கு வேண்டிய அளவை செய்தல். | 1000/- | 200/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாரிடமிருந்து 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விப்பிணைப்பணம் கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: ஏற்கனவே அழைக்கப்பட்ட மேற்படி கேள்விக்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் கேள்விப் பிணைப்பணம் செலுத்த வேண்டியதில்லை.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்

மாநகரசபை, யாழ்ப்பாணம்.
17-6-86.

[A-851]


## "மத்திய கல்லூரி என்றும் தளர்ந்து விடாது"

[யாழ்ப்பாணம்]

"இடரது எத்தனை வந்திடினும் மத்திய கல்லூரி தனது முன்னேற்றப்பாதையில் என்றும் தளர்ந்திடாது. மத்திய கல்லூரியின் கொடி என்றும் உயரப்பறந்திடும்".

இவ்வாறு மத்திய கல்லூரி உயர்தர விஞ்ஞான மாணவர் மன்றத்தால் நடாத்தப்பட்ட "விஞ்ஞானதினம் 86" இல் உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு.வே. பாலசுந்தரம் கூறினார்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் முன்னாள் அதிபருமான திரு. கந்தசாமி கலந்து கொண்டார்.

மன்றத்தின் தலைவர் செல்வன் தி. கிருபராஜன் தலைமையில் விழா ஆரம்பமாகியது; கல்லூரியினதும் மன்றத்தினதும் முதலாவது விஞ்ஞான வெளியீடாகிய "மத்திய ஆய்வாளன்" வெளியிடப்பட்டு முதலாவது பிரதியைப் 'பிரதம விருந்தினர் பெற்றுக் கொண்டார்.

மாணவர்களுக்கு அவசியமான இரு விடயங்களில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. "லேசர் கதிர்கள்", "மின் கணணிகள்" என்னும் தலைப்பில் திரு. சுத்தானந்தன், திரு. சந்திரமௌலி ஆகியோர் உரையாற்றினர் மாணவர் நிகழ்ச்சிகளும்இடம் பெற்றன.

சிறப்புரை ஆற்றிய திரு. கந்தசாமி, விஞ்ஞான கல்வியின் அவசியம் பற்றியும் வாழ்க்கையில் ஆற்றிடும் பங்கு பற்றியும் தனது கருத்துக்களை கூறினார்.

மன்றத்தின் செயலாளர் செல்வன் இ. மோகன்ராசின் நன்றியுரையை அடுத்து கல்லூரி கீதம் தொடர விழா முடிவுற்றது. [கெ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணமாநகராட்சி மன்றம்

### வடிகால்களுக்குப் பக்கச்சுவர் அமைத்தல் வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல்- காலநீடிப்பு

மேற்படி விடயம் சம்பந்தமான எமது 05- 06- 86ந் திகதிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கேள்விப்படிவங்கள் வழங்கும், கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் தினங்கள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் தினம்:
25- 06- 86 புதன் கிழமை நண்பகல் 12-00 வணிவரை.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் தினம்;
26- 06- 86 வியாழக் கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19-06-86. [A 849]



## முதலாவது நினைவஞ்சலி



JOSEPH (Kondavil)

மறைவு: 19-06-1985

எமது இதயங்களில் என்றும் நீங்கா அன்பு தந்தையின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,

மனைவி, மக்கள்,
மற்றும் உற்றுர்.

'பூபதி பவனம்'
கோண்டாவில் கிழக்கு.
C 2938



## 7-வது ஆண்டு நினைவஞ்சலி




முதலியார்
வை. மகேசனின்
பாரியார் இராசமணி

தோற்றம்: 02-02-1909
மறைவு: 19-06-1979

என்றும் அன்பு மறவாத
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்,
நண்பர்.

நவாலி. C 2898


★



நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற கோப்பாய் சிவம் எழுதிய சைவாலயக் கிரியைகள் நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி:யில் நூல்ஆசிரியர் உரையாற்றுவதையும் நிகழ்ச்சிக்குவந்திருந்தோரில் சிலரையும் படத்தில் காணலாம்.

★

## "அடக்கமுடன் அரும்பணிசெய்த மனிதாபிமானி"

[புலோலி]

''அரிமா சங்கத்தைப் பருத்தித்துறையில் முதன் முதல் தோற்றுவித்த திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை மனித நேயம் மிக்கவர், வதிரி பரமானந்தா ஆச்சிரமத்திலும் அளவெட்டி அனுதைகள் இல்லத்திலும் அவர் ஆற்றி வரும் பணிகள் அளப்பரியன. புகழ் விரும்பாத இவரது உதாரகுணங்களிற் பல எமக்கே தெரியாமல் இருக்கிறது. இவரது சேவைகள் அகதிகளையும் அனுதைகளையும் நோக்கி இருப்பது பாராட்டிற்குரியது.''

இவ்வாறு வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் புலோலி ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற உலக சாதனையாளரும் பட்டயக் கணக்காளருமான திரு. அ. சோமசுந்தரம்பிள்ளையின் பாராட்டு விழாவிலும் தேநீர் விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

இவ் விழாவிற்கு மன்றத் தலைவர் திரு கோ. குமாரவேலு தலைமை வகித்தார். இவர் தமது உரையின்போது ''ஞானசம்பந்தக் கலை மன்ற உறுப்பினர் ஒருவர் உலக சாதனையாளர் வரிசையில் இடம்பெற்றுள்ளமை மன்றத்திற்குப் பெருமைதரவல்லது'' என்றுர்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவரும் பேராசிரியருமான திரு வி. கே. கணேசலிங்கம் பேசுகையில், ''திரு. சோமசுந்தரம்பிள்ளைக்கு உலக சாதனையாளர் விருது என்றே கிடைத்திருக்க வேண்டும். காலங்கடத்தாவது இதுகிடைத்தமை வரவேற்கத்தக்கது என்றுர்.

எழுத்தாளர் நெல்லை க. பேரன் பேசுகையில், ''லயன்ஸ் கழகத்தினர் மத்தியிலும் எழுத்தாளர்களை அறிமுகப் படுத்தி அவர்களைப் பெருமைப்படுத்தும் பணியில் திரு சோமசுந்தரம்பிள்ளை ஈடுபட்டுள்ளார்'' என்றுர்.

மன்னர் திட்டமிடல் பகுதி உத்தியோகத்தர் திரு இராசரத்தினம், ஹாட்லிக் கல்லூரி மாணவர் செல்வன் ஆ. மாயூரன், ஆகியோரும் திரு. சோமசுந்தரம் பிள்ளையின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை பேசுகையில் ''எல்லோரிடத்திலும் அன்பு பேணி நடக்கவேண்டும், அன்பு ஒன்றுதான் உலகை வெல்லும் மகா சக்தி'' என்றுர்.

மன்றச் செயலாளர் திருமதி இ. யோகரஞ்சிதம் நன்றி கூறினர்.

## நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கலா நிலைய வெள்ளி விழாவை முன்னிட்டு உயர்கல்வி கலைக் கழகம் நாடகப் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.

வட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள கல்லூரியில்,பொது ஸ்தாபனங்கள், விளையாட்டுக் கழகங்கள் யாவும் இப்போட்டியில் பங்கு பற்றலாம். போட்டியில் வெற்றி பெறுபவர்களிற்கும் சிறந்த நடிகர்களிற்கும் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டிகளிற்கான சகல தொடர்புகளையும் வட்டுக்கோட்டை மாவடி கலாநிலைய அதிபருடன் தொடர்பு கொள்ளலாம்.

(சிவ)

## இன்றைய பலன்

மாதம்-ஆனி
திகதி-5 (1986- 06- 19)
கிழமை- வியாழன்
திதி- துவாதசி பி. ப. வரை
நக்ஷத்திரம்- விசாகம் பி.இ வரை

மேடம்- துன்பத்தின் ரேகை படரும், எவ்விடயத்திலும் தயக்கம் ஏற்படும், அவசரப் போக்கைத் தவிர்க்கவும்.

இடபம்- களஸ்திர வழிப் பெருமையுண்டு, காதலர்களுக்கு கற்கண்டானதினம், திடீர்வரவுமுண்டு.

மிதுனம்- எண்ணியகாரியம் தடைப்படும், பொருள் விரயம் ஏற்படும், வாகனம் செலுதுவோர் நிதானம் செலுத்தவும்,

கடகம்- நீண்டநாள் பிரச்னையில் இன்று சமரசமுடிவு காண்பீர்கள், சிலருக்கு அரசியலில் ஆர்வம் பிறக்கும், புண்ணிய விருப்புமுண்டு.

சிங்கம்- மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும், இடமாற்றம் ஏற்படும், தொழில் துறையில் நன்மை உண்டு.

கன்னி- சகோதரவழியில் பெருமை சேரும், இல்லத்தில் இனிமை தவழும், அறிஞர்களின் ஆதரவும்உண்டு. சுப தினம்.

துலாம்- பணவிடயத்தில் கவனம்செலுத்தவும்,குடும்பத்தில் மனச்சஞ்சலமும் உண்டு. நாவடக்கம் விரும்பத்தக்கது.

விருச்சிகம்- எழுத்தாளர்களுக்கு சிறப்பு மேலோங்கும். தானிய விருத்தியுமுண்டு, திருப்திகரமான தினம்.

தனுசு- சகோதரவழி சஞ்சலம் உண்டு, ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவீர்கள், துன்பத்தின் நிழல் படரும், தெய்வ நம்பிக்கை நன்று.

மகரம்- பெரியோர் ஆதரவு உண்டு, புத்திரர் மகிழ்ச்சியும் புண்ணியவிருப்பும் உண்டாம், நீண்டநாள் பிணியும் நிவர்த்தியாகும்.

கும்பம்- நிலைதடுமாறும், முன்னேற்றத்தில் முட்டுக்கட்டைத்தென்படும், பெருமையின் நிழல் தொடரும், நிதானம் நன்று.

மீனம்- பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், உறவினர் சகாயம் உண்டு தொழில் துறையில் அதிக ஈடுபாடும் ஏற்படும்.

திருமலை ரவீந்திரன்

## வருடாந்த உற்வசம்

[யாழ்ப்பாணம்]

உடுப்பிட்டி அருள்மிகு சந்திரசேகர பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவ தீர்த்தம் 21ம் திகதி சனிக்கிழமையும் பூங்காவனம் மறுதினம் 22ம் திகதி ஞாயிறும் நடைபெறவுள்ளன. தீர்த்த உற்சவத்தன்று வழமை போல் அன்னதானமும் இடம் பெறும்.

தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த 12-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றது.


லிடோ
காலை 1 0-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ்
நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர்
நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

I. D. P. M.
(LONDON)
Part I - 21-06-1986
Part II - 23-06-1986
G. C. E. (Ord) Level தகுதியுடன் Computer பகுதியில் தேறுவதற்கு சிறந்த வாய்ப்பு.
உடன் தொடர்புகொள்க:
North Ceylon Technical Institute
41, St. PETERS LANE, JAFFNA.
TELE: 24355. [A-737]

PROFESSIONAL EXAMS
I. C. M. A. FOND A, FOND B } ஆரம்பமாகி விட்டது.
PROF I, PROF II } 21-06-86
A. A. T. PRE, INTER } ஆரம்பமாகி விட்டது.
A. A. T. மாணவர்கட்கு பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் உண்டு.
உடன் தொடர்புகொள்க.
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. PETERS LANE, JAFFNA.
TELE; 24355. [A-738]

TEI
KNOWLEDGE IS WEALTH
வகுப்புக்கள் ஆரம்பம்!
Technical Engineering Institute
★ Basic எலக்ரொனிக்ஸ் அன்ட் றேடியோ, T. V. ரிப்பாரிங்பிய
★ ஆட்டோமோபைல் ரிப்பியாரிங்,
★ டீசல் மெக்கானிசம் அன்ட் ரிப்பியாரிங்,
★ எயார்கென்டிசனர் அன்ட் ரேப்பிரிஜிரேட்டர் ரிப்பியாரிங்,
★ Draftmanship,
★ எலக்ரிக் வயரிங்.
வகுப்புகள் ஆரம்பம்: 1 - 7 - 86
கற்பித்தல், பரீட்சை, சான்றிதழ், வகுப்புகளில் சேர உடன் பதிவு கொள்ளவும்.
C/o PILOT INSTITUTE,
151, செம்மணி ரோட், நல்லூர்,
(கல்விக்கந்தோருக்கு அண்மையில்) (A-739)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 19-6-86

# ‘தமிழீழம் சுதந்திரம் காணும் விழாவே நான் கலந்துகொள்ளும் முதல்விழா”

[சென்னை]

“தமிழ்ஈழம் சுதந்திரம் அடையும் விழாதான் நான் கலந்துகொள்ளும்முதல்பொது விழாவாக இருக்கும். எங்களுக்கு என்று ஒரு நாடு கிடைத்தபிறகுதான் நான்யாரையும் எங்கேயும் சந்திப்பேன்”.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சென்னையிலிருந்து வெளிவரும் ஜுனியர் விகடனுக்குஅளித்த பிரத்தியேக பேட்டியில் தெரிவித்துள்ளார்.

திரு. பிரபாகரன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

“இலங்கை ராணுவம் நடத்தும் இந்த விமானத்தாக்குதலில் மக்கள் அதிகம் இறந்துவிடவில்லை. காரணம் இம்மாதிரி விமானத் தாக்குதல்களை இலங்கை அரசு நடத்தப் போவதை சில வாரங்களுக்கு முன்பே தமிழ்ப்பகுதிகளில் எச்சரித்துவிட்டோம். ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கு குழிகள் வெட்டப்பட்டுள்ளன. ஆண் துணை இல்லாத வீடுகளில் எங்கள் இயக்க வீரர்கள் பதுங்கு குழிகளை வெட்டி உதவினார்கள். விமான ஓசை கேட்டவுடனேயே குழிகளில் பதுங்க பெரியவர்கள் மட்டுமல்ல குழந்தைகள் கூடப்பயிற்சி பெற்று விட்டார்கள்.

இலங்கைராணுவம் விமான மூலம் வீசப்படும் குண்டுகள் பெரும்பாலும் ‘வேஸ்ட்’ என்று வர்ணித்தார் பிரபாகரன். “வேண்டுமானால் மக்களிடையே பீதியைக் கிளப்ப உதவலாம். மற்றபடி எங்கள் இலக்குகளை அவர்களால் தாக்க முடியாது. அவர்களிடம் நேபாம் குண்டுகள் வீசுவதற்குத்தயாராக இருக்கின்றன. இன்னமும் அந்த குண்டுகளை அவர்கள்

## ஜுனியர் விகடனில் ‘பிரபா’

பயன்படுத்தவில்லை. இரக்கமில்லாமல் நேபாம் குண்டுகள் வீசினால் அப்பாவிப் பொது மக்கள் துன்பம் அடைய நேரிடும்.

இலங்கை இராணுவம் மே 17-ம் தேதி யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் தொடங்கியது. கடற்படை, விமானப் படை துணையோடு, ராணுவம் அந்தத் தீவை முப்புறங்களில் சூழ்ந்து முன்னேறி விடுதலைப் புலிகளை நசுக்கி அழிக்கத் திட்டமிட்டது. மூன்றே நாளில் காரியத்தை முடிக்கவேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள். ஆனால் மூன்று நாட்கள் கழிந்தும் சிங்கள ராணுவம் ஒருகிலோ மீட்டர் கூட முன்னேறமுடியவில்லை. விடுதலைப் புலிகள் கொடுத்த பதிலடியில் ராணுவம் திணறிப்போனது,

(தொடரும்)

## எட்டு இளைஞர் கைதாகினர்

(வவனியா)

பம்பைமடு வைகாலி கூலாங் குளம் என்ற இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 8 தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:

தவசி தவராசா, நா. பரமேஸ்வரன், இ. வரதராசா, ஆ.சிவபாலசுந்தரம், ஆ.துரைமாணிக்கம், ஆ. உதயகுமார், ஆ.சுகுமார், அ.கந்தசாமி

## ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வீரமாகாளி அம்மன் ரதோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறுகிறது. சனிக்கிழமை தீர்த்தஉற்சவம் நடைபெறும்.

★

உரும்பராய் ஓடயம்பதி அருள்மிகு கற்பகவிநாயகர் ரதோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறுகிறது. சனிக்கிழமை தீர்த்த உற்சவம் நடைபெறும்.

## துப்பாக்கிச் சூடு: வயோதிப மாதின் வயிற்றைத் துளைத்தது

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டதால் வயோதிபமாது வயிற்றில் காயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலையில் தனது வீட்டுக் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்த சமயம் இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

துரைசாமி அன்னலட்சுமி [வயது 54] என்ற இப்பெண்ணின் வயிற்றில் ரவை துளைத்துச் சென்றதால் அப்பெண் கிணற்றடியிலேயே விழுந்துவிட்டார்.

## கொல்லப்பட்ட ஊர்காவல் படையினர்

[வவனியா]

சடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முள்ளிக்குளம் என்ற இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊர்காவல் படையைச் சேர்ந்த மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களின் சடலங்கள் வவுனியாவுக்குச் கொண்டுவரப்பட்டு உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

## ஜூன் மாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபவர்களுக்குரிய ஜூன் மாத ஓய்வூதியம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் வழங்கப்படும்.

“ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இவர்களது ஜூன் மாத பற்றுச் சீட்டுக்கள் அவர்களது தனிப்பட்ட விலாசத்திற்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படமாட்டாது. கால தாமதத்தை தவிர்ப்பதற்காக இவை அந்தந்த வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆகையால் தமது ஜூன் மாத ஓய்வூதியப் பற்றுச் சீட்டை வங்கி முகாமையாளரிடம் நேரடியாகப் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து வங்கியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“இலங்கை வங்கியின் கச்சேரிக்கிளை மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 21ம் திகதி சனிக்கிழமை 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமைகளில் ஜூன் மாத ஓய்வூதியப் பணம் வழங்கப்படும்.”

## கருத்தரங்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மாதம்21ம் 22ம்திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக ‘கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர், யாழ். பல்கலைக்கழக வணிக மன்ற அலுவலக அறையில் அனுமதி சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

## தொலைபேசி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்புகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

அநுராதபுரம் வரை எவ்வித பழுதும் இல்லை என்றும் ஆனால் லக்கலவில் திருத்தப்படும் வரை அநுராதபுரம்கூட தொடர்பு கொள்ள முடியாதென்றும் அவர்தெரிவித்தார்.

லக்கலவில் பலத்த காற்றினால் கோபுரத்திலுள்ள சில யந்திரங்கள் பழுதடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். நகரிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு தொடர்பு கொள்ள முடியாததற்கு பல இடங்களில்தொலைத்தொடர்பு இயந்திரங்கள் கடந்த காலங்களில் கொள்ளையடிக்கப்பட்டதே காரணமென்றும் தெரிவித்தார். [க]

# மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை பரிமளம்
[இளைப்பாறிய யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்]

திருமதி கணபதிப்பிள்ளை பரிமளம் காலமாகிவிட்டார் இவர் நவரத்தினம், தவராசா காலஞ்சென்ற செந்தில்நாயகம், ஜெயராசசிங்கம், சரஸ்வதி, பூமணி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினியின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியத் (கூட்டுறவு அலுவலகம், பரந்தன்) தின் அன்புமாமியாரும், குகப்பிரியா, குகப்பிரசாதன். குகதர்சினி ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னாரின்பூதவுடல் இல. 2, இரண்டாம் ஒழுங்கை, பலாலி வீதி இல்லத்திலிருந்து கொக்குவில் இந்துமயானத்திற்கு (19-06-86) இன்று வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். (C 2972)

### T.K.கந்தையா

T K.கந்தையா [ஓய்வுபெற்றP.W.D. Chief Clerk] காலமானார். அன்னார் பார்வதி அம்மாளின் அன்புக் கணவரும், மங்களேஸ்வரி, மகேந்திரன், குணேஸ்வரி, கமலேஸ்வரி (U.K), கந்தகுமாரன், கணேந்திரன் (Zambia), கமலஜோதி, கோகிலகமலினி, கந்தபாலன் [Zambia] ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மராஜா, பிரேமா, குணரத்தினம், விஜயரத்தினம், பத்மினி, வசந்தி, கனகரத்தினம், சிவானந்தம், உமா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18.6.86 புதன்கிழமை பன்னிரண்டு மணிக்கு புகையிரத வீதி தெல்லிப்பளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

(C- 2961) தகவல்:மனைவி

### முருகேசு பசுபதி

உரும்பிராயைப் பிறப்பிடமாக கொண்டவரும் உடுவில் வாசியுமான திரு முருகேசு பசுபதி (முன்னாள் சுங்கத் திணைக்கள பிரதம கணக்காளர்) சிவபதமடைந்தார். இவர் தில்லைமலரின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் இராமநாதன் கல்லூரி) அன்புக்கணவரும் சகலகலாவல்லி, சித்திரகலா, உமாசுதன் (அரச மருந்துக் கூட்டுத்தாபனம்) சிவசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாகரன் (நைஜீரியா) லோகேஸ்வரன் (பொஸ்வானா) ஆகியோரின் மாமனாரும் கிருஷ்ணானந்தன், கர்ணன், லஷ்மி, வைஷ்ணவியின், பேரனும். திருமதி தங்கரத்தினத்தின் மைத்துனரும். திரு. கந்தசாமியின் (பிறப்பு, இறப்பு. விவாக பதிவாளர்) சகலனும், திருமதி மகளரி சிவராச சுந்தரம், சிவாஜி என்பவர்களின் சிறிய தந்தையாரும், அகதிகள் புனர் வாழ்வுக்கழகத்தின் கவர்னருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 19-06-86 வியாழக்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பூவோடை மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

“இலக்குமிகரம்” உடுவில் [C. 2970]

# மரண அறிவித்தல்

### சுப்பையா கனகலிங்கம்

கோண்டாவில் மேற்கு, றெயில் றேட்டைச் சேர்ந்த சுப்பையா, கனகலிங்கம் 18-6-86ல் காலமானார். அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும், மகாலிங்கம் [U. K.] செல்வலிங்கம் [U. K.] மனோரமா [U K.] ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லம், காலஞ்சென்ற சோமசுந்தரம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஞ்சினி, நாகேஸ்வரி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் மாமனாரும், அமலன், பிரபாகரன், ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் றெயில் றேட் இல்லத்தில் இன்று (19-6-86) வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெறும். (C-2975)

### வேலுப்பிள்ளை பேரம்பலம்
(அப்பாத்துரை) உபாத்தியார்

வேலணை மேற்கு முதுபெருஞ் சைவப்பெரியார் சைவபூஷணம், வே. பேரம்பலம் அவர்கள் சிவனடி சேர்ந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக்கணவரும், சந்திரசேகரம் சங்கீதபூஷணம், முருகேசபிள்ளை ஓய்வு பெற்ற ஆசிரியர், கணேசலிங்கம் பிரபல வர்த்தகர், (நல்லூர்), திருமதி காந்திமதி மகாதேவன், திருமதி சுகுணமதி விமலநாதன் ஆகியோரின் அருமைத்தந்தையும் மனோன்மணி, நகுலாம்பாள், சிவமணி, மகாதேவன் (மருத்துவ ஆய்வு கூடம், கொழும்பு), விமலநாதன்-பிரபலவர்த்தகர், கொழும்பு ஆகியோரின் மாமனாருமாவார். இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (19-06-86) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியை அம்பலவி மயானத்தில் நடைபெறும். உற்றாரும், உறவினரும், நண்பரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். பெ, சந்திரசேகரம்

வேலணை மேற்கு, வேலணை. (C 2973)

### அன்னம்மா ஆறுமுகம்

காரைநகர், பாலாவோடையைச் சேர்ந்த திருமதி அன்னம்மா ஆறுமுகம் அவர்கள் 17.6.86 செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு சிவபதமடைந்தார். இவர் ஆ.ச.ஆறுமுகம் [ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், காரைநகர், பரந்தன், கொழும்பு] அவர்களின் அன்பு மனைவியும், இராசமலர், இராசலிங்கம் [ஞானமலர் ஸ்ரோஸ், கொழும்பு], பாலாம்பிகை, பாலேந்திரன் [கிறீம்கவுஸ் பரந்தன்), இந்திராதேவி, வசந்திராதேவி, தயாபரதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஆ. நடராசா, சந்திரமதி, கணநாதன், சாரதாமணி DR. ஆனைமுகன், நேசேந்திரன், கணேசலிங்கம் ஆகியோரின் மாமியாரும், சங்கர், மாறன், செந்தாமரை, அறிவழகன், காண்டீபன், கவிதா, கல்பனா பாபு, காயத்திரி, வர்ணா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவர். இவரது ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

முக்கிய குறிப்பு: வானொலி அறிவித்தலின் படி 19.6.86 இன்று மாலை 5 மணிக்கு நடைபெற மாட்டாது என்பதை அறியத் தருகிறோம்.

[C-2994]

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org